DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 93/2020

List of Witness : Lw3

Prosecution Witness : PW7

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | ராமன் | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | முருகன் | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 22/01/2026

(எதிரி ஆஜர் .)

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் விருப்பாட்சி மேடு சமத்துவபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் பழனியில் பில்டிங்க் சூப்பர்வைசராக பணிபுரிந்து வருகிறேன். 02.12.2019 ஆம் தேதி இரவு 8.30 மணிக்கு நான் வேலை முடித்து ஒட்டன்சத்திரத்தில் இருந்து எங்கள் வீடான விருப்பாட்சி மேடு, சமத்துவபுரத்திற்கு சென்று கொண்டிருந்தபோது எனது நண்பர் கௌதம் எனக்கு முன்னால் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தார். நான் அவருக்கு பின்னால் எனது இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தேன். விருப்பாட்சி சமத்துவபுரம் நுழைவு அருகே எதிரே வந்த தோஸ்த் வாகனம் ஓவர் ஸ்பீடில் கவனக்குறைவாக ஓட்டிவந்து கௌதம் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதில் கௌதமிற்கு தலை மற்றும் வலது காலில் பலத்த காயம் ஏற்பட்டது. நான் கௌதமின் அண்ணன் மணிக்கண்டன் என்பவருக்கு தகவல் சொல்லிவிட்டு தனியார் ஆம்புலன்ஸ் மூலம் குமரன் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்த்தேன். அங்கு முதலுதவி முடித்து கோவை ராயல் கேர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தார். தோஸ்த் வாகனத்தை ஓட்டிவந்த நபரின் பெயர் மாரிமுத்து ஆகும். ஆஜர் எதிரி தான் மாரிமுத்து ஆவார். அவர் தான் அன்றைய தினம் தோஸ்த் வாகனத்தை ஓட்டிவந்தார். கௌதம் விபத்தின் காரணமாக இறந்துவிட்டார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

எந்த தேதியில் எந்த இடத்தில் வைத்து போலீசார் என்னை விசாரணை செய்தார்கள் என்றால் கடந்த 02.12.2019 ஆம் தேதி சம்பவ இடத்தில் வைத்து விசாரணை செய்தார். என்னை போலீசார் விசாரணை செய்யும் போது என்ன நேரம் என்றால் இரவு 8.30 மணி இருக்கும். போலீசார் விசாரணை செய்யும்போது கிழக்கே இருந்து மேற்கு நோக்கி சமத்துவபுரம் பிரிவு அருகே சென்று கொண்டிருந்தேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் முதல்விசாரணையில் சொல்லியவாறு கௌதம் அண்ணனான மணிக்கண்டனுக்கு தகவல் சொன்னேன் என்ற விவரத்தை போலீசார் விசாரிக்கும் போது சொன்னேனா என்றால் சரிதான். சமத்துவபுரம் பிரிவிலிருந்து எந்த திசையில் எனது வீட்டிற்கு திரும்ப வேண்டும் என்றால் இடது பக்கமாக திரும்பி செல்லவேண்டும். நான் இறந்த கௌதம் பின்னால் செல்லவில்லை என்றும் நான் வீட்டில் தான் இருந்தேன் என்றால் சரியல்ல. பின்னிட்டு தகவல் கிடைத்த பின்பு தான் கௌதம் இறந்ததாக மணிகண்டனுக்கு தகவல் சொன்னேன் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் எதிரி கவனக்குறைவாகவும், தாருமாறாகவும் வந்ததாக சாட்சியம் அளித்தது பொய் என்றால் சரியல்ல. கௌதம் முறையாக சாலை விதிகளை பின்பற்றாமல் எதிரியின் வாகனத்தின் மீது அவர் தான் மோதினார் என்றால் சரியல்ல. இந்த விபத்து முழு காரணம் கௌதம் தான் என்றால் சரியல்ல.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

S MOHANRAJ
Digitally signed by S MOHANRAJ
Date: 2026.01.22 17:34:28 +0530

Judicial Magistrate (FAC)
Oddanchatram.
Date : 22/01/2026

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 93/2020

List of Witness : Lw8

Prosecution Witness : PW8

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | தாமரைக்கண்ணன் | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | அதிவீரன் | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 22/01/2026

(எதிரி ஆஜர் .)

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் விருப்பாட்சியில் குடியிருந்து வருகிறேன். நான் ஒட்டன்சத்திரம் வாசுகி நகை கடையில் மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். 02.12.2019 ஆம் தேதி நான் கடையில் வேலையில் இருந்தபோது இரவு 8.50 மணிக்கு எனக்கு கௌதம் விபத்தில் அடிப்பட்டதாக தகவல் கிடைத்தது. நான் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது அவரை குமரன் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்றுவிட்டார்கள். அவரை பார்ப்பதற்காக குமரன் மருத்துவமனைக்கு வந்தபோது அவரை கோவைக்கு மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாக கேள்விப்பட்டோம். பின்பு சம்பவ இடத்தை பார்க்க போகலாம் என்று சம்பவ இடத்திற்கு 11.15 , 11.30 மணி போல் சென்று பார்த்தோம். அப்போது சத்திரப்பட்டி காவல் நிலையத்தில் இருந்து போலீசார் வந்து விசாரணை செய்து கொண்டிருந்தார்கள். சம்பவ இடத்தை பார்த்தார்கள். அதை பற்றி விசாரணை செய்தார்கள். என்னிடம் சாட்சியாக கையொப்பம் கேட்டார்கள். நான் சாட்சியாக கையொப்பம் செய்து கொடுத்தேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் முதல் விசாரணையில் கூறியவாறு போலீசார் விசாரணை செய்தபோது கூறினேன் என்றால் சரிதான்.

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

S MOHANRAJ
Digitally signed by S MOHANRAJ
Date: 2026.01.22 17:34:35 +0530

Judicial Magistrate (FAC)
Oddanchatram.
Date : 22/01/2026